# மகப்பேறுக்கு முற்பட்ட மரபணு பரிசோதனை

## தீர்மானம் எடுத்தல்

இந்த துண்டுப்பிரசுரம் ஒன்டாரியோவில் கிடைக்கும், மகப்பேறுக்கு முற்பட்ட மரபணு பரிசோதனையின் பொதுவான வகைகளை விளக்குகிறது. பரிசோதனை (ஸ்கிரீனிங்) என்றால் என்ன என்பதைப் பற்றி உங்கள் உடல்நலப்-பராமரிப்பு வழங்குபவரிடம் பேசுவதையும் நீங்கள் விரும்பும் தீர்மானத்தை எடுப்பதையும் இது மாற்றீடு செய்யாது.



PRENATAL SCREENING
DÉPISTAGE PRÉNATAL
ONTARIO

Funded by:
Ontario

# முக்கிய உண்மைகள்

நீங்கள் இந்த துண்டுப்பிரசுரத்தைப் படிக்கும்போது, மகப்பேறுக்கு முற்பட்ட மரபணுப் பரிசோதனை, குழந்தையின் சில மரபணு நிலைமைகள் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருப்பதை மட்டுமே உங்களுக்குத் தெரிவிக்க முடியும் என்பதை புரிந்துகொள்வது முக்கியம். அதன் பின்பு உறுதிப்படுத்தக் கூடிய கூடுதல் சோதனைகளை நீங்கள் யோசிக்கலாம். மகப்பேறுக்கு முற்பட்ட மரபணு பரிசோதனையானது, உங்கள் குழந்தைக்கு மரபணு நிலை நிச்சயமாக உள்ளதா என்பதைச் தெரிவிக்காது.



- மகப்பேறுக்கு முற்பட்ட மரபணுப் பரிசோதனைகள் உங்கள் குழந்தைக்கு டிரைசோமி 18 (எட்வர்ட்ஸ் சிண்ட்ரோம்) அல்லது டிரைசோமி 21 (டவுன் சிண்ட்ரோம்), ஆகிய அறிவுசார் குறைபாடு மற்றும் உடல்நலக் குறைபாட்டை ஏற்படுத்தும் இரண்டு மரபணு நிலைகள் இருப்பதற்கான வாய்ப்பை மையமாகக் கொண்டது.
- பரிசோதிக்கப்படுவது கர்ப்பத்திற்கு எந்த ஆபத்தையும் ஏற்படுத்தாது, ஏனெனில் இது அல்ட்ராசவுண்ட் மற்றும் இரத்தப் பரிசோதனை மூலம் செய்யப்படுகிறது.
- ஒன்டாரியோவில் உள்ள அனைத்து கர்ப்பிணிகளுக்கும் மகப்பேறுக்கு முற்பட்ட மரபணு பரிசோதனை கிடைக்கப்பெறும்; அந்தப் பரிசோதனையைச் செய்வதா இல்லையா என்பது உங்கள் விருப்பம்.
- எந்தவொரு நபரும் டிரைசோமி 18 அல்லது டிரைசோமி 21 உடன் குழந்தையைப் பெறலாம் (அவர்களது குடும்பத்தில் வேறு யாருக்கும் இல்லாவிட்டாலும் கூட). வயதான கர்ப்பிணிகளுக்கு இது நிகழும் வாய்ப்பு அதிகரிக்கிறது.

# டிரைசோமி 18 மற்றும் டிரைசோமி 21 என்றால் என்ன?

டிரைசோமி 18 மற்றும் டிரைசோமி 21 ஆகியவை பொதுவாக குழந்தை கருவுறுவதற்கு முன்பு முட்டை அல்லது விந்தணுவில் ஏற்படும் மரபணு மாறுபாடுகளாகும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில், டிரைசோமி 18 உள்ள ஒரு குழந்தைக்கு இரண்டு குரோமோசோம் 18 இருப்பதற்கு பதிலாக மூன்று குரோமோசோம் உள்ளன. டிரைசோமி 21 இல், இரண்டு குரோமோசோம் 21 இருப்பதற்கு பதிலாக மூன்று குரோமோசோம் உள்ளன.



## டிரைசோமி 18 (எட்வர்ட்ஸ் சிண்ட்ரோம்)

டிரைசோமி 18 உடலின் பல்வேறு பாகங்கள் எவ்வாறு உருவாகின்றன என்பதைப் பாதிக்கிறது மற்றும் டிரைசோமி 18 உடைய பல குழந்தைகள் பிறப்பதற்கு முன்பே இறந்துவிடுகின்றன; பிறக்கும் பெரும்பாலானோர் ஒரு வருடத்திற்குள் இறந்து விடுகிறார்கள். உயிருடன் பிறந்தவர்களுக்கு பொதுவாக கடுமையான உடல்நலம் மற்றும் அறிவுசார் பிரச்சினைகள் இருக்கும். டிரைசோமி 18 உடைய சிறிய எண்ணிக்கையிலான குழந்தைகள் தங்கள் வாழ்க்கையின் முதல் ஆண்டைக் கடந்தும் வாழ்கிறார்கள், அவர்களுக்கு அதிக கவனிப்பு தேவைப்படுகிறது.

## டிரைசோமி 21 (டவுன் சிண்ட்ரோம்)

டிரைசோமி 21 உள்ள ஒவ்வொருவரும் தனித்துவமானவர்கள். அவர்கள் தனிப்பட்ட விதமான பலம் மற்றும் சவால்களைக் கொண்டுள்ளனர். ஆனால் அவர்கள் அனைவருக்கும் ஓரளவு அறிவுசார் இயலாமை உள்ளது, அதாவது பெரும்பாலானவர்களுக்கு எதையும் கற்றுக்கொள்ள அதிக நேரம் எடுக்கும். வயதாகும்போது, டிரைசோமி 21 உள்ளவர்களுக்கு தனிப்பட்ட பராமரிப்பு மற்றும் அன்றாடப் பணிகளைச் செய்வதற்கு ஆதரவு தேவைப்படலாம். தேவைப்படும் ஆதரவின் அளவு நபருக்கு நபர் மாறுபடும்.

டிரைசோமி 21 உள்ளவர்களுக்கு பின்வருவன உட்பட சில உடல்நலப் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புகள் அதிகம்:

- இதய குறைபாடுகள்
- கண்பார்வை மற்றும் காது கேட்கும் பிரச்சினைகள்
- உணவு உட்கொள்ளுதல் மற்றும் செரிமானம் தொடர்பான பிரச்சினைகள்
- உறங்குவதில் சிக்கல்கள்
- பிற்காலத்தில் அல்சைமர்ஸ் நோய்

டிரைசோமி 21 உள்ள சிலருக்கு இந்த பிரச்சினைகள் எதுவும் இருக்காத அதேவேளையில் மற்றவர்களுக்கு பல சிக்கல்கள் உள்ளன. டிரைசோமி 21 உள்ளவர்களுக்கு உதவ சிகிச்சை மற்றும் ஆதரவு உள்ளது, ஆனால் அதை குணமாக்க முடியாது.

டிரைசோமி 21 உள்ளவர்கள் பொதுவாக 60 கள்வரை வாழ்கின்றனர், மேலும் பெரும்பாலானோர் முன்பை விட இப்போது பிறர் உதவியின்றி வாழ்கின்றனர். டிரைசோமி 21 உள்ள பல பெரியவர்கள் நிறைவான வாழ்க்கை வாழ்கிறார்கள் மற்றும் அவர்களால் பள்ளி, வேலை மற்றும் சமூக வாழ்க்கையில் பங்கேற்க முடியும்.

# மகப்பேறுக்கு முற்பட்ட மரபணு பரிசோதனை எனக்கு சரியானதா?

மகப்பேறுக்கு முற்பட்ட மரபணுப் பரிசோதனையைச் செய்ய வேண்டுமா என்பதை நீங்கள்தான் தீர்மானிக்க வேண்டும். இதில் சரியான அல்லது தவறான தீர்மானம் என்று எதுவும் இல்லை. பின்வரும் கேள்விகளைப் பற்றி சிந்திப்பது ஒரு தீர்மானத்தை எடுக்க உங்களுக்கு உதவும்.

## உங்கள் குழந்தையின் ஆரோக்கியம் மற்றும் வளர்ச்சியை பாதிக்கக்கூடிய ஒரு மரபணு நிலை இருப்பதற்கான வாய்ப்பு அதிகமாக உள்ளதா என்பதை நீங்கள் அறிய விரும்புகிறீர்களா?

பல பெற்றோர்கள், ஆனால் அனைவரும் அல்ல, குழந்தைக்கு டிரைசோமி 18 அல்லது 21 இருப்பதற்கான வாய்ப்பை அறிய விரும்புகிறார்கள். சிலர் குழந்தைக்கு மரபணு நிலைமை இருப்பதற்கு அதிக வாய்ப்பு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறார்கள், இதனால் அடுத்ததாக என்ன செய்வது என்று அவர்கள் தீர்மானிக்க முடியும். மற்றவர்கள் குறைந்த வாய்ப்புதான் உள்ளது என்பதை உறுதி செய்துகொள்ள விரும்புகிறார்கள். தங்களுக்கு ஒரு தவறான பரிசோதனை முடிவு கிடைத்துவிடுமோ என்று சிலர் கவலைப்படுகிறார்கள். அதாவது குழந்தைக்கு மரபணு நிலைமை இருப்பதற்கான வாய்ப்பு இல்லாத போதும் இருப்பதாக பரிசோதனை முடிவுகள் காட்டிவிடுமோ என்று கவலைப்படுகிறார்கள். இங்கு விவரிக்கப்பட்டுள்ள இரண்டு பரிசோதனைகளிலும் இது அடிக்கடி நிகழ்கிறது (மேம்படுத்தப்பட்ட முதல் மூன்றுமாத பரிசோதனை மற்றும் இரண்டாவது மூன்றுமாத பரிசோதனை செய்யவேண்டும்).

## உங்கள் பரிசோதனை முடிவுகள் டிரைசோமி 18 அல்லது 21 இருப்பதற்கு அதிக வாய்ப்பு இருப்பதாகக் காட்டினால், நீங்கள் அடுத்ததாக செய்யப்படும் நோய்கண்டறியும் பரிசோதனையை செய்வீர்களா?

டிரைசோமி 18 மற்றும் 21 (கோரியானிக் வில்லஸ் சாம்பிளிங் மற்றும் அம்னியோசென்டெசிஸ்) ஆகியவற்றை கண்டறியும் பரிசோதனைகள் கருச்சிதைவு அடையும் ஆபத்தை சிறிய அளவில் ஏற்படுத்தும், ஆனால் குழந்தைக்கு ஏதேனும் ஒரு நிலை இருக்கிறதா என்பதை உறுதிப்படுத்த இதுதான் ஒரே வழி.

## டிரைசோமி 18 அல்லது 21 உடன் கர்ப்பத்தைத் தொடர்வது அல்லது முடிப்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

உங்கள் வாழ்க்கைச் சூழல், கோட்பாடுகள் மற்றும் நம்பிக்கைகளைப் பொறுத்து உங்கள் முடிவு உங்களுக்குச் சரியானதாக இருக்க வேண்டும். உங்கள் உடல்நலப்-பராமரிப்பு வழங்குபவர், குடும்பத்தினர், நண்பர்கள் அல்லது ஆலோசகர்களுடன் பேசுவதும், மேலதிக சோதனைகளைப் பற்றி அறிந்துகொள்வதும் நீங்கள் ஒரு தீர்மானத்தை எடுக்க உதவும்.

## இந்த மரபணு நிலைகளில் ஒன்றைப் பற்றி தெரிந்துகொள்வது, அதற்குத் தயாராக உங்களுக்கு உதவுமா?

டிரைசோமி 18 அல்லது 21 பற்றி மேலும் அறிந்துகொள்ளவும், உள்ளூரில் என்ன உதவிகள் கிடைக்கும் என்று அறிந்துகொள்ளவும் அல்லது குழந்தைக்கான தத்தெடுப்புத் திட்டங்களை செய்யவும் கூடுதல் நேரம் எடுத்துக்கொள்வது கர்ப்பத்தைத் தொடரும் சிலருக்கு, உதவியாக இருக்கிறது.

## பரிசோதனை முடிவுகள் உங்கள் கர்ப்ப பராமரிப்பில் என்ன மாற்றத்தை ஏற்படுத்தும்?

மகப்பேறுக்கு முற்பட்ட மரபணுப் பரிசோதனை, மகப்பேறுக்கு முந்தைய மேலதிக பராமரிப்புக்கும் கண்காணிப்புக்கும் வழிவகுக்கும். மேலதிக கண்டறியும் பரிசோதனையை நீங்கள் செய்யவில்லை என்றாலும், மரபணு நிலையின் அறிகுறிகள் அல்லது வேறு அக்கறைக்குரிய நிலை இருந்தால், உங்களுக்கு அதிக கவனிப்பு வழங்கப்படும்.

# நான் என்ன தெரிவுகளை செய்யலாம்?

டிரைசோமி 18 மற்றும் 21 க்கான மகப்பேறுக்கு முற்பட்ட மரபணு பரிசோதனையை நீங்கள் செய்ய முடிவு செய்தால், உங்கள் உடல்நலப்-பராமரிப்பு வழங்குபவர் அதை உங்களுக்காக ஏற்பாடு செய்ய உதவுவார்.



## கிடைக்கப்பெறும் (ஸ்கிரீனிங்) பரிசோதனைகள்

01

### மேம்படுத்தப்பட்ட முதல் மூன்று மாத பரிசோதனை (eFTS)

கர்ப்பத்தின் 11 வாரங்கள் 2 நாட்கள் முதல் 13 வாரங்கள் 3 நாட்கள் வரையில் செய்யப்படும் இந்தப் பரிசோதனைக்கான கட்டணத்தை ஒன்டாரியோ ஹெல்த் இன்சூரன்ஸ் திட்டம் (OHIP) செலுத்தும். இது 11-14 வார (நியூக்கல் டிரான்ஸ்லூசன்சி) அல்ட்ராசவுண்ட் என்று அழைக்கப்படும் ஒரு சிறப்பு அல்ட்ராசவுண்டையும் இரத்த பரிசோதனையையும் உள்ளடக்கும். டிரைசோமி 18 மற்றும் 21 இருக்கும் பெரும்பாலான கர்ப்பங்களை இவை கண்டறியும், ஆனால் அனைத்தையுமே அல்ல.

02

### இரண்டாவது மூன்றுமாத பரிசோதனை (STS)

eFTS கிடைக்கவில்லை என்றால் OHIP மூலம் பணம் செலுத்தப்பட்ட STS ஐ தெரிவுசெய்யலாம். கர்ப்பத்தின் 14 வாரங்கள் முதல் 20 வாரங்கள் 6 நாட்கள் வரை இரத்தப் பரிசோதனை மூலம் STS செய்யப்படுகிறது. eFTS ஐப் போலவே, இது டிரைசோமி 18 மற்றும் 21 உள்ள பெரும்பாலான கர்ப்பங்களைக் கண்டறியும் ஆனால் அனைத்தையுமே அல்ல.

03

### உடலுக்குள் கருவிகள் செலுத்தாமல் செய்யப்படும் மகப்பேறிற்கு முற்பட்ட பரிசோதனை (NIPT)

NIPT என்னும் ஒரு இரத்தப் பரிசோதனையையும், ஆய்வகத்தைப் பொறுத்து கர்ப்பத்தின் 9 அல்லது 10 வாரங்களுக்குப் பிறகு, எப்போது வேண்டுமானாலும் செய்யலாம். இது மேற்கூறப்பட்ட பரிசோதனைகளைவிட டிரைசோமி 18 மற்றும் 21 உள்ள அதிகமான கர்ப்பங்களைக் கண்டறியும். டிரைசோமி 13 எனப்படும் மற்றொரு மரபணு நிலையையும் NIPT கண்டறியும்.

எங்கள் இணையதளத்தில் உள்ள பின்வரும் நிதியளிப்பு அளவுகோல்களில் ஒன்றை நீங்கள் கொண்டிருந்தால் NIPT க்கு OHIP நிதி வழங்கும்:

- குழந்தை பிறக்கும் போது உங்கள் வயது 40 அல்லது அதற்கு மேல் இருக்கிறது.
- டிரைசோமி 18, 21 அல்லது 13 உடன் நீங்கள் முன்பு கர்ப்பமாக இருந்தீர்கள்.
- நீங்கள் இரட்டைக் குழந்தைகளுடன் கர்ப்பமாக இருக்கிறீர்கள்.

நீங்கள் நிபந்தனைகளை பூர்த்தி செய்யவில்லை, ஆனால் இன்னும் NIPT யை செய்ய விரும்பினால், அதற்கான கட்டணத்தை நீங்களே செலுத்தலாம். உங்கள் உடல்நலப்-பராமரிப்பு வழங்குபவர் அதை உங்களுக்காக ஏற்பாடு செய்யவேண்டும்.

நீங்கள் NIPT ஐ செய்ய தீர்மானித்தால், உங்களுக்கு மேம்படுத்தப்பட்ட முதல் அல்லது இரண்டாவது மூன்றுமாத பரிசோதனை தேவையில்லை. ஆனாலும் குழந்தையின் ஆரோக்கியத்தைப் பற்றிய கூடுதல் தகவலுக்காக (இரத்தப் பரிசோதனை இல்லாமல்) 11-14 வார அல்ட்ராசவுண்ட் செய்யும்படி பரிந்துரைக்கப்படுகிறது.

# எனது பரிசோதனை முடிவுகள் எதை அர்த்தப்படுத்துகின்றன?

## மேம்படுத்தப்பட்ட முதல் மூன்றுமாத பரிசோதனை (eFTS) மற்றும் இரண்டாவது மூன்றுமாத பரிசோதனை (STS) முடிவுகள்

இரத்தப் பரிசோதனை செய்து சுமார் 5 வேலை நாட்களுக்குப் பிறகு, முடிவுகள் உங்களுக்கு உடல்நல-பராமரிப்புப் வழங்குபவருக்கு அனுப்பப்படும். குழந்தைக்கு டிரைசோமி 18 அல்லது 21 இருப்பதற்கான அதிக வாய்ப்பு ("ஸ்கிரீன் பாசிட்டிவ்") அல்லது குறைந்த வாய்ப்பு ("ஸ்கிரீன் நெகடிவ்") உள்ளதா என்பதை முடிவுகள் உங்களுக்குத் தெரிவிக்கும்.

### ஸ்கிரீன் நெகடிவ் (பரிசோதனை எதிர்மறை முடிவு)

பெரும்பாலான மக்கள் எதிர்மறையான முடிவைப் பெறுகிறார்கள், இது குழந்தைக்கு டிரைசோமி 18 அல்லது 21 இருப்பதற்கான வாய்ப்புகள் குறைவு என்று காட்டுகிறது. எதிர்மறையான முடிவு குழந்தைக்கு இந்த நிலைமைகளில் ஒன்று இருப்பதற்கான வாய்ப்பு இல்லை என்பதை அல்ல, அதற்கான வாய்ப்பு குறைவு என்றுதான் அர்த்தப்படுத்தும். உங்கள் கர்ப்பத்தை உடல்நலப்-பராமரிப்புப் வழங்குபவர் கவனிக்கும் விதம் மாறாது.

### ஸ்கிரீன் பாசிட்டிவ் (பரிசோதனை நேர்மறை முடிவு)

பாசிட்டிவ் முடிவு என்பது குழந்தைக்கு டிரைசோமி 18 அல்லது 21 இருப்பதற்கான அதிக வாய்ப்பு உள்ளது என்பதை அர்த்தப்படுத்தும் ஆனால் குழந்தைக்கு அது கண்டிப்பாக இருக்கும் என்பதை அல்ல. உண்மையில், இந்த முடிவைக் கொண்ட பெரும்பாலான மக்களுக்கு, இந்த நிலைமைகளில் ஒன்றைக் கொண்ட குழந்தை பிறப்பதில்லை. eFTS அல்லது STS பாசிட்டிவ்வாக இருந்தால், இன்னும் உறுதி செய்துகொள்ள, OHIP மூலம் கட்டணம் செலுத்தப்படும், அதிக துல்லியமான NIPT என்னும் மற்றொரு பரிசோதனையை நீங்கள் செய்யலாம்.

நஞ்சுக்கொடி திசுக்களின் மாதிரியை சோதிக்கும் கொரியானிக் வில்லஸ் சாம்பிளிங் (CVS) அல்லது அம்னியோடிக் திரவத்தை சோதிக்கும் அம்னியோசென்டெசிஸ் என்னும் நோய்கண்டறியும் பரிசோதனைகளில் ஒன்றை செய்ய நீங்கள் தீர்மானிக்கலாம். இரண்டுமே, உங்கள் குழந்தைக்கு குரோமோசோம் மாற்றம் உள்ளதா என்பதை உறுதியாகக் காண்பிக்கும் (ஆனால் கருச்சிதைவு ஏற்படுவதற்கான சிறிய அளவிலான ஆபத்தை இரண்டுமே கொண்டுள்ளன). மேலதிகமாக எந்த சோதனையையும் செய்ய வேண்டாம் என்றும் நீங்கள் தீர்மானம் செய்யலாம்.



# உடலுக்குள் கருவிகள் செலுத்தாமல் செய்யப்படும் மகப்பேறிற்கு முற்பட்ட பரிசோதனை (NIPT) முடிவுகள்

“அதிக ஆபத்து" அல்லது "குறைந்த ஆபத்து" எனத் தெரிவிக்கும் NIPT முடிவுகளைப் பெறுவதற்கு சுமார் 10 வேலை நாட்கள் ஆகும். மற்ற இரண்டு பரிசோதனைகளைப் போலவே, குழந்தைக்கு ஒரு மரபணு நிலை உள்ளதா என்பதை முடிவுகள் உறுதியாகக் காண்பிக்காது, ஆனால் இது அதிக துல்லியமானது. "அதிக ஆபத்து" முடிவைப் பெறும் பெரும்பாலான மக்கள் டிரைசோமி 18, 21 அல்லது 13 உள்ள ஒரு குழந்தையைக் கொண்டிருக்கிறார்கள், ஆனால் அதை உறுதிப்படுத்திக் கொள்ள CVS அல்லது அம்னியோசென்டெசிஸ் பரிசோதனைகளும் தேவைப்படும். "அதிக ஆபத்து" என்ற முடிவைப்பற்றியும் கூடுதல் சோதனைக்கான தெரிவுகளைப் பற்றியும் நீங்கள் ஒரு மரபியல் நிபுணரிடம் பேச விரும்பலாம்.

## பரிசோதனை முடிவொன்றும் இல்லை

சில நேரங்களில், NIPT ஒரு முடிவைக் கொடுக்கத் தவறிவிடும். மற்ற இரண்டு பரிசோதனைகளில் இது அரிதாகவே நடக்கும். NIPT முடிவைக் கொடுக்கத் தவறினால், குழந்தைக்கு ஒரு மரபணு நிலை இருப்பதாக இது அர்த்தப்படுத்துவதில்லை. NIPT ஐ மீண்டும் செய்ய நீங்கள் தெரிவு செய்யலாம். மற்ற பரிசோதனைகளில் ஒன்றை, அல்ட்ராசவுண்ட் அல்லது நோய்கண்டறியும் பரிசோதனை (CVS அல்லது அம்னியோசென்டெசிஸ்) ஆகியவற்றைச் செய்யவும் நீங்கள் தெரிவுசெய்யலாம்.

குறிப்பு: "ஸ்கிரீன் பாசிட்டிவ்", "ஸ்கிரீன் நெகடிவ்", "அதிக ஆபத்து" மற்றும் "குறைந்த ஆபத்து" ஆகிய சொற்கள் ஒன்டாரியோ ஆய்வகங்களின் அறிக்கைகளில் பயன்படுத்தப்படுகின்றன.



# மேலதிக கேள்விகள் இருக்கின்றனவா? நாங்கள் உதவ காத்திருக்கிறோம்.

மகப்பேறுக்கு முற்பட்ட பரிசோதனை பற்றி மேலும் தெரிந்துகொள்ள எங்கள் வலைத்தளத்தைப் பார்வையிடுங்கள்.

சான்றளிக்கப்பட்ட எங்கள் மரபணு ஆலோசகர்களை தொலைபேசி அல்லது ஈமெயில் மூலம் தொடர்பு கொள்ளுங்கள்.

## தொடர்புத் தகவல்

PrenatalScreeningOntario.ca

1-833-351-6490 (இலவசம்) / 613-737-2281

PSO@BORNOntario.ca



**TAMIL** – PRENATAL GENETIC SCREENING. Publication No. (301040).
ISBN 978-1-4868-6337-2. PDF. December 2023. © King's Printer for Ontario, 2023.